91 A/L
WEEKEND CLASSES
(Sat & Sun)
நடைபெறுகின்றன.
★ பிரிவு I ★
07.30 - Zoology
08.30 - Botany
07.30 - Pure
08.30 - Applied Maths
09.30 - Chemistry
10.30 - Physics
எமது வழமையான
ஆசிரியர் குழு
NEW MASTER INSTITUTE
B.M.C.Lane, Jaffna.
241, Navalar Road Jaffna.

பக்கங்கள்: நான்கு


Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

91 A/L
WEEKEND CLASSES
(Sat & Sun)
நடைபெறுகின்றன
★ பிரிவு II ★
08.30 - Zoology
09.30 - Botany
10.30 - Chemistry
11.30 - Physics
7.30 - Pure
8.30 - Applied Maths
புதிய பகுதிகள்
ஆரம்பமாகியுள்ளன.
NEW MASTER INSTITUTE
B,M C, Lane, Jaffna.
241, Navalar Road Jaffna.

சுடர் 5: பிரமோதூத ஆனி 13 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 03 (27 · 06 · 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 124



போர் விமானங்கள், பொம்மர்களின் குண்டு வீச்சுக்கு இலக்காகி சிதைவுற்று சின்னா பின்னமாகிக் கிடக்கும் யாழ் நகர மிட்டாசிக் கடைச் சந்திப் பகுதி கடைகள்

# பாகிஸ்தான் படைகள் இலங்கை வரக்கூடும்!

## ராஜீவ்காந்தி எச்சரிக்கிறார்

புதுடில்லி, ஜூன் 27

இலங்கைக்கு பாகிஸ்தான் துருப்புக்களை அனுப்பக்கூடும் என்று இந்தியாவின் முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி எச்சரித்துள்ளார்.

இது குறித்து இப்போதைய பிரதமர் திரு. வி.பி. சிங்கிடம் கூறியபோது அவர் அதனைப் பெரிதுபடுத்திக் கொள்ளாமல் அசட்டையாக இருப்பதாகவும் திரு. காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

கௌஹாத்தியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையிலேயே திரு. ராஜீவ் காந்தி இவ்வாறு தெரிவித்தார். அவர் சொன்னதாவது:-

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையே புதிதாக ஏற்பட்டுள்ள யுத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்க பாகிஸ்தான் தனது துருப்புக்களை அனுப்பக்கூடும்.

இந்தியாவுடன் நட்புறவு கொண்டிராத பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவியை இலங்கை அரசு நாடியுள்ளது.

முன்னர் ஒருமுறை நான் பிரதமர் சிங்கைச் சந்தித்தபோது இதுபற்றி அவரிடம் கூறினேன்.

அப்போது அவர், ''பாகிஸ்தான் துருப்புக்களை அனுப்பாது; ஆனால் பொருள்களை அனுப்பி உதவலாம்'' என்று கூறினார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் முழுமையாக அமுல் நடத்தப்பட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது— என்றார். (அ-எ)

### முச்சந்தி முரளி



வெளிநாட்டுத் துருப்புக்கள் இலங்கையிலை மாறி மாறி இருக்க வேண்டும்என்று ஒரு நியதி உண்டோ யாருக்குத் தெரியும். . . !

## ரோந்து சென்ற படையினர் மீது தாக்குதல்: 5 சிப்பாய்கள் பலி

நேற்றுக் காலை வவுனியா மாமடுவிலிருந்து நெடுங்குளம் நோக்கி ரோந்து சென்ற ஸ்ரீலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஐந்து இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பின்வரும் ஆயுதங்கள் தங்களால் மீட்கப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

★ ரி 56 - 2 ரகம்-5 (19 மகஸின்கள் உட்பட)

★ 7.62 ரவைகள் - 563

★ கே. ஆர். ரக கிரனேட்டுகள் - நான்கு

★ ஹோல்சர் - இரண்டு.

இந்தச் சம்பவத்தின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளானதாகவும் கூறப்பட்டது. (உ)

## யாழ். நகரத்துக்கு இரவில் வந்தது ஹெலி!

யாழ்ப்பாணம், ஜூன் 27

நேற்றிரவு ஏழு மணியளவில் யாழ். நகருக்கு மேல் சுமார் முக்கால் மணி நேரம் வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் ஒன்று, நகரின் பல பகுதிகளையும் நோக்கி சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது. றொக்கட் தாக்குதலும் இடம் பெற்றது.

இந்தத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரங்கள் ஏதும் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

இதேவேளை-

நேற்று மாலைவரை யாழ். நகரத்தில் அமைதி நிலவியது. பெரும் அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

## நல்லூரில் ஹெலித் தாக்கு! இரண்டு வீடுகள் சேதம்

நல்லூர் சங்கிலியன் வீதி பண்டாரக்குளம் பகுதியின் மீது திங்கட்கிழமை இரவு ஹெலிக்கொப்டரில் இருந்து ரொக்கட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் ஒருவர் காயமுற்றார். இரண்டு வீடுகளும் ஒரு காரும் சேதமடைந்தன.

இத் தாக்குதலினால் சேதமுற்ற காரின் ஒரு பகுதி ''அரிதட்டு'' போல் காட்சியளித்தது.

திருமதி புஷ்பகாந்தி என்பவரது வீடும், இராமலிங்கம் என்பவரது வீடுமே சேதமடைந்தன.

திருமதி புஷ்பகாந்தி (வயது 57) இச்சம்பவத்தில் காயமுற்றார். [உ-10]

### யாழ். நோக்கிப் புறப்பட்ட

## பல்கலைக்கழகமாணவருக்கு இடையில் நடந்தது என்ன?

யாழ்ப்பாணம், ஜூன் 27

மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் இருந்து கடந்த 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் நோக்கிப்புறப்பட்ட பஸ்ஸில் பயணம் செய்த 50 மாணவர்களின் நிலை என்ன?

இது குறித்து தகவல் ஏதும் பெறமுடியாது இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 50 மாணவர்கள் பஸ் ஒன்றில், யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டனர்.

ஆனால் அவர்கள் இன்னும் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை வழியில் மன்னம்பிட்டியில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# கொக்குவிலில் ஹெலி ரொக்கட் வீச்சு! ஒரே குடும்பத்தில் 4 பேர் பலி!! ஏழு பேர் படு காயம்!!!

## நேற்று இரவு நடந்த பயங்கர சம்பவம்

கொக்குவில், ஜூன் 27

கொக்குவில் ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்றிரவு 8 மணியளவில் ஹெலிக்கொப்டரில் இருந்து நடத்தப்பட்ட ''ரொக்கட்'' தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்தனர்.

ரொக்கட் வீட்டுக்கு முன் விழுந்து வெடித்தது ரொக்கட் வெடித்து சிதறியதில் வீட்டில் இருந்த அந்த நால்வரும் பலியானார்கள்.

உயிரிழந்தவர்கள் ஹேமகுமார் என்னும் கட்டட ஒப்பந்தகாரரும் அவரது பெறாமக்களான 3 பிள்ளைகளும் எனத் தெரியவந்தது.

இதே குடும்பத்தைச் சேர்ந்த மேலும் 3 பிள்ளைகளும், 3 பெண்களும் ஓர் ஆணும் படுகாயத்துடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களில் சிலரது நிலைமை ஆபத்தான கட்டத்தில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-69)

# ஆலையில் இருந்த அகதிகள் மீது பொம்மர் திடீர்த் தாக்குதல்!

## நிலாவெளியில் 35 பேர் மரணம்

திருகோணமலை நிலாவெளியில் செல்வம் மில்லில் அகதிகளாகத் தங்கிருந்தவர்கள் மீது பொம்மர் விமானம் ஒன்று தாக்குதல் நடத்தியதில் சுமார் 35 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

முப்பதிற்கும் அதிகமானோர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

இந்தச் சம்பவம் கடந்த 23ஆம் திகதி இடம் பெற்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

திருகோணமலையில் நடைபெற்ற தாக்குதல்களை அடுத்து ஏராளமான பொது மக்கள் நிலாவெளியில் உள்ள இந்த மில் கட்டத்தில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர். என்றும —

அவர்கள் மீதே பொம்மர் விமானம் ஒன்று தாக்குதல் நடத்தியது. என்றும் கூறப்பட்டது.

படுகாயமடைந்த சிலர் சிகிச்சை இன்றி பின்னர் மரணமானதாகவும் —

மற்றும் சிலர் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது (இ-10)

# ஈழத் தமிழர் ஏழு நாட்களுக்குள் முழு விவரம் தெரிவிக்க வேண்டும்

## தமிழக அரசு கண்டிப்பான உத்தரவு

சென்னை, ஜூன் 27

தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள் தம்மைப் பற்றிய முழு விவரங்களையும் ஏழு தினங்களுக்குள் அறிவிக்கவேண்டும் என்று தமிழக அரசு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளில் இது ஆகப் பிந்தியதாகும்.

தமிழக அரசின் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்துள்ளது.

இது சம்பந்தமாக தமிழக அரசு நேற்று உத்தரவு பிறப்பித்தது.

★ 1983 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் உரிய ஆவணங்கள் இன்றித் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் அனைவரும் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தங்களைப் பற்றிய முழு விவரங்களையும் அடுத்த ஏழு தினங்களுக்குள் தெரிவிக்கவேண்டும்.

★ இத்தகவல்களைத் தராத இலங்கைத் தமிழர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

★ இலங்கைத் தமிழருக்கு வாடகைக்கு விட்டிருக்கும வீட்டுச் சொந்தக்காரர்கள் அது பற்றிய விவரங்களை அருகில் உள்ள பொலிஸ்

(3 ஆம் பக்கம் பார்க்க)



போர் விமானங்களின் குண்டு வீச்சுக்கு இலக்கான யாழ். நவீன சந்தைக் கட்டடத்தின் சில கடைகள் எரிந்து கொண்டிருக்கும் காட்சி படங்கள்: கே. எஸ். ஆர்.

### சுப நேரம்

27-6-90

புதன்கிழமை ஆனி 13

சுபநேரம்!

04-25—05-55

இராகுகாலம்

11-55—01-25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## (சின்னஞ்சிறு விளம்பரம்)

### காணி விற்பனைக்கு

அல்லைப்பிட்டி மாகாவித்தியாலயத்திற்கு அண்மையில் (யாழ் நகரிலிருந்து 3 மைல் தூரத்தில்) 5 பரப்பு காணி நல்ல தண்ணீர்க் கிணறுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 455, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (13474)

### தவறிவிட்டது

இரு சூட்கேஸ் நீலம், பிறவுண் நிறமுடையவை கேரதீவு துறைமுகத்தில் தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவுசெய்து N சுப்பையா 81, நாவலர் வீதி, (மனோகரா படமாளிகை அருகில்) விறகுகாலையில் ஒப்படைக்கவும். அல்லது கைவேலி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவில் ஒப்படைக்கவும். (13480)


## காய்கறி விலை உயர்வு

கொழும்பு, ஜூன் 27

மட்டக்களப்பில் காய்கறி விலைகள் அதிகரித்துள்ளன. கத்தரிக்காய் ஒரு கிலோ 70 ரூபாவாகவும் பயித்தங்காய் 60 ரூபாவாகவும் அதிகரித்திருப்பதாக கொழும்பு செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (அ-எ)

## திருநகரில் விழுந்த ஷெல் மூவரைப் பலி எடுத்தது

கிளிநொச்சி, ஜூன் 27

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணி அளவில் திருநகர் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. 3 பொது மக்கள் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் ஒருவர் பரந்தனை சேர்ந்த சௌந்தரம் (வயது 28) என அடையாளம் காணப்பட்டது.

மேலும் 7 பேர் இந்த சம்பவத்தில் படுகாயம் அடைந்தனர். இவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். (இ-76)

## கிளிநொச்சியில்

# முகாமுக்குள் இறங்க முயன்ற ஹெலியை நோக்கிச் சூடு

கிளிநொச்சி, ஜூன் 27

கிளிநொச்சி இராணுவ முகாமுக்குள் இறங்க முயன்ற ஹெலிகொப்டர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறு பிற்பகல் 2 மணி அளவில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

இரு ஹெலிக்கொப்டர்கள் முகாமை நோக்கி வந்தன ஒரு ஹெலி முகாமை வட்டமிட்டு வர மற்றது முகாமுக்குள் இறங்க முற்பட்டது. விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியபோது இரு ஹெலிகளும் அங்கிருந்து சென்று விட்டன. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்துவிடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் சிறுதுநேரம் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது (இ-76)

## கைதானோரை விடுவிக்க முயற்சி

கொழும்பு, ஜூன் 27

வடக்கு- கிழக்கு மாகாணத்துக்கு வெளியே கைதானவர்களை விடுவிக்க 'மேர்ஜ்' இயக்கம் உதவுகிறதாகக்கூறப்படுகிறது (இ-எ)

## ராணுவமுகாம் கைவிடப்பட்டது

கொழும்பு ஜூன் 27

சளுவாஞ்சிக்குடி இராணுவ முகாம் கைவிடப்பட்டுள்ளது.

அங்கிருந்து படையினர் வெளியேறி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## பொலீஸ் அதிபர் இராஜினாமா கோரிக்கை

சென்னை, ஜூன் 26

கோடம்பாக்கத்தில் வைத்து ஈ பி ஆர். எல், எப். பிரமுகர்களைக் கொலை செய்தவர்கள் தப்பிச் சென்றதற்கான பொறுப்பை ஏற்று மாநில பொலீஸ் அதிபரும் உள்துறைச் செயலாளரும் இராஜினாமாச் செய்ய வேண்டும்.

இப்படித் தமிழ்நாடு பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் புலனாய்வுத் துறைப் பிரிவு முழுமையாக மாற்று அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (இ-எ)

## கிளிநொச்சி: ஹெலித் தாக்குதல்

கிளிநொச்சி ஜூன் 27

கிளிநொச்சியில் திங்கள் பகல் 11 மணியிலிருந்து 12 மணிவரை பலத்த ஹெலித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவமுகாமைச்சூழஉள்ளகரடிப்போக்கு, கனகபுரம், கணேசபுரம், பரவிப்பாஞ்சான், திருநகர், கிளிநொச்சிப் பகுதிகளில் இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை இராணுவ முகாமில் இருந்து இடை இடையே ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன' (இ-76)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்து:

# செஞ்சிலுவைச் சங்கம் முயன்றால் அரசு தடுக்காது

கொழும்பு, ஜூன் 27

யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு வெளிநாடுகளில் இருந்து மருந்து போன்ற உதவிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கருதினால் அதனை அரசு தடுக்காது.

பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா முன்கண்டவாறு தெரிவித்தார் என்று கொழும்புச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஆனால் இப்படியான உதவிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாகவோ, அல்லது வெளிநாட்டு அமைச்சின் ஊடாகவோ அல்லது சுகாதார அமைச்சின் மூலமாகவோ மட்டுமே யாழ். ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்துள்ளார். (இ எ)

# திருமலையில் கடைகள் எரிப்பு; ரஞ்சன் ஒப்புக்கொள்கிறார்

கொழும்பு, ஜூன், 27

திருகோணமலை நகரில் கடைகள் எரிக்கப்பட்டிருப்பதை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவே தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

திருமலை நகரில் கடைகள் எரிக்கப்பட்டிருப்பதை தாம் அங்கு விஜயம் செய்தபோது நேரில் கண்டதாகவும்—

பாரபட்சமின்றி நடந்து கொள்ளும்படியும், மக்களில் எந்தப் பிரிவினருக்கும் தீங்கு விளைவிக்க வேண்டாம் என்று தாம் படையினரை எச்சரித்துள்ளதாகவும்—

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதசண்டையை நீடித்து நடத்தும்வரை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அரசின் இராணுவ நடவடிக்கைகளும் தொடரும் என்றும் அவர் சொன்னார். [இ-எ]

## கிளிநொச்சி மின்சாரம் தடை அரிசி ஆலைகள் ஸ்தம்பிதம்

கிளிநொச்சிப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில்இருந்து மின்சாரம் இல்லை.

இதனால் அரிசி ஆலைகள் பல இயங்காத நிலையில் உள்ளன.

அரிசிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இங்குஒரு மூடை அரிசி 900 ரூபா ஆக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (இ-76)

## ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை:

# வெளி மாவட்ட மாணவரே அதிக புள்ளி எடுத்து சாதனை

கொழும்பு, ஜூன் 27

1989 டிசம்பர் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் நாட்டிலேயே அதிக கூடிய புள்ளிகளை வெளிமாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே பெற்றுள்ளனர்.

இதனை பரீட்சை ஆணையாளர் ஆர்தர்வெதமுல்ல தெரிவித்தார்.

பொறியியல் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் கே. ஆனந்தகுமார் ஆகக்கூடிய 366 புள்ளிகளைப் பெற்றிருக்கிறார்.

பண்டாரவளை மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் எம். எச். எம். பிரேமரத்தின, யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த செல்வன் எஸ் சுரேஸ்குமார் ஆகியோர் தலா 363 புள்ளிகளையும் பெற்றனர்

மருத்துவப் பிரிவில் யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் என். சுபநேசன் 350 புள்ளிகளைப் பெற்று ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவனாகத் திகழ்கிறார்.

கொழும்பு டி எஸ். சேனநாயகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் டி. எஸ். செனவிரத்தின, செல்வன் ஆர். பி. ஜெயதிலகா ஆகியோர் தலா 346 புள்ளிகளையும் பெற்றனர்.

கலைப்பிரிவில், பின்னவல மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் ஜி எஸ். பி. ஹேமச்சந்திர 338 புள்ளிகளைப் பெற்று ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவராக விளங்குகின்றார்.

வர்த்தகப் பிரிவில் செல்வன் எஸ் டி. ஜெயவர்த்தனா 320 புள்ளிகளைப் பெற்று முதலாவதாக வந்திருக்கிறார். இவர் வெளிவாரி மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## கல்வி திணைக்களம் பரந்தனுக்கு

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கி வந்த கிளிநொச்சி கல்வித் திணைக்களம் கூட்டுத்தாபன சட்டடம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக திணைக்களம் தற்காலிகமாகவே இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளதாக கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். கந்தசாமி தெரிவித்தார். (இ 76)

# ஆஸ்பத்திரி வீதி வங்கி ஊழியர் சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 27

ஆஸ்பத்திரி வீதியி உள்ள இலங்கை வங்கி யாழ் பிரதான கிளை ஊழியர்களை இன்று 27 ஆம் திகதி புதன்கிழமை வங்கியில் சமுகமளிக்குமாறு பிரதான முகாமையாளர் கேட்டு உள்ளார்.

யாழ் நகர தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து யாழ். ஆஸ்பத்திரி வீதிக் கிளை மட்டும் அன்றி யாழ் நகரில் உள்ள அனைத்து வங்கிகளும் மூடப்பட்டுள்ளன. [இ]

## சர்வோதயம் உதவி

கொழும்பு ஜூன் 27

கொழும்பில் தங்கியுள்ள வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் அகதிகளுக்கு சர்வோதய இயக்கம் உதவிகளை வழங்கி வருகிறதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## மருந்துக்கடை இடமாற்றம்

இப்போதய சூழ்நிலையில் பாதுகாப்புக் கருதி எமது ஸ்தாபனம் கீழ்காணும் முகவரிக்கு மாற்றி உள்ளோம்.

★ ஆயுள்வேத மருந்துகள்
★ மருந்துச் சரக்குகள்
★ கோவில் அபிஷேகச் சாமான்கள்


விற்பனையாளர்

### க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

4, பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கு அண்மையில்)

(C/4768)


## ஓராண்டு நினைவு அஞ்சலி



### திரு. கந்தையா இரத்தினசிங்கம்

தோற்றம்: 15 - 4 - 1931
மறைவு 7 - 7 - 1989

ஓடின துருண்டு ஓராண்டு
உழன்று கலங்குவ தெம்நெஞ்சம்
தந்தை குருவாய்க் கண்டோமே
தாயாய்ச் சேயாய்த் தழுவினமே
அந்தோ உந்தன் நினைவலைகள்
ஆற்றுவது அறியோம் என்செய்வோம்.

மனைவி, பிள்ளைகள்

3, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். (13523)


## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சிற்றுண்டிச் சாலைகள் தொடர்பான கேள்விப்பத்திரங்களைஏற்றுக்கொள்வதற்கென அறிவிக்கப்பட்டிருந்த முடிவுத் திகதி (27-06-1990) இப்பொழுது 06-07-1990 (வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு) என மாற்றப்பட்டுள்ளது.

பதிவாளர்.

26-06-1990



## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார சேவைகள்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தற்காலிகமாக இயங்குவதற்குக் கோண்டாவிலில் பின்வரும் விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

திரு. சு. ஞானசுந்தரம்
முத்தட்டு மட ஒழுங்கை,
கே. கே. எஸ். றோட்,
கோண்டாவில்.

சுகாதார சேவைகள் பணிமனையில் கடமை புரியும் சகல உத்தியோகத்தவர்களும் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ந. கனகசபை
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

C/ 4770



## மேர்க்கன்டைல் கிறெடிற் லிமிட்டெட்

இப்பொழுது யாழ். நகரப் பகுதியில் நிலவும் அமைதியற்ற சூழ்நிலை காரணமாகவும் கொழும்பு தலைமையலுவலகத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாலும் நாம் எமது யாழ். கிளை அலுவலகத்தின் அலுவல்களை தற்காலிகமாக இடை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் சிரமங்களைப் பொருட்படுத்தாது எம்முடன் ஒத்துழைக்குமாறு எமது வாடிக்கையாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

கிளை முகாமையாளர்,
மேர்க்கன்டைல் கிறெடிற் லிமிட்டெட்,
11/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[13478]



Hindu Board of Education

## சைவ வித்தியா விருத்திச்சங்கம் பதவி வெற்றிடங்கள்

### பொது முகாமையாளர்

எமது நிறுவனம் சிறுவர் நிறைவாழ்வு இல்லம் விதைகள், நாற்றுக்கள் விநியோகத் திட்டம், ஓட்டு வேலை, குழாய் வேலை, தச்சுவேலை பயிற்சித்திட்டம் உணவு விநியோக நிலையம், ஆடைகள் தயாரிப்பு பயிற்சி முதலிய திட்டங்களை அமுல் செய்கின்றது. இத்திட்டங்களை மேற்பார்வை செய்து திறமையாக நிர்வகிக்க கூடிய பொது முகாமையாளர் தேவை. இப்பதவி திட்டங்களில் நல்ல அனுபவம் உள்ள பட்டதாரிகட்கே பொருத்தமானதாகும். அரசாங்க சேவை மற்றும் தனியார் சேவைகளிலிருந்து விலகியவர்கள் தகுதியுடையவர்களாக இருப்பின் விண்ப்பிக்கலாம்.


### எழுது வினைஞர்

எமது அலுவலகத்தில் வேலைசெய்வதற்கு அனுபவம் வாய்ந்த எழுது வினைஞர் தேவை ஆங்கிலத்தில் தட்டெழுத்து தெரிந்தவர்களாக இருத்தல் வேண்டும். திறமை, அனுபவம் முதலியவற்றை பொறுத்தே சேவைப்படி தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்களை 15 - 07 - 90 திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

தலைவர்
சைவ வித்தியா விருத்திச் சங்கம்

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. [சி-4769]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நாகம்மா நவரத்தினம்

தோற்றம்: 21 - 03 - 1924
மறைவு: 08 - 07 - 1989

திதி: 27 — 06 — 1990

அரியாலையம்பதியில் வந்துதித்த நற்தாயே - நீ
அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும்
ஆளாகி நின்றாயே
இன்பத்திலும் துன்பத்திலும் இடையறா
முயற்சியாலும் - எமக்கு
அன்பூட்டி அமுதூட்டி அறிவூட்டி வளர்த்தாயே
வைய வாழ்வு தனை நீக்கி வான வாழ்வடைந்து
ஓராண்டு கழிந்திடினும்
அனுதினமும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
வணங்குவோமே.

அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள்.

இல. 66, வைரவர் கோவில் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

[13466]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யுத்தகால வர்த்தகம்

இது யுத்த காலம். பொது மக்கள் தொடக்கம் அதிகாரிகள் வரையும், தொண்டர்கள் தொடக்கம் வர்த்தகர்கள் வரையும் மிகப் பொறுப்புடன் பணியாற்ற -செயலாற்ற-வேண்டிய காலம். சாதாரண, இயல்பு நிலைக் காலங்களை விட, ஒவ்வொரு பிரசையும் மேலதிகமான பொறுப்புடன் இயங்கவேண்டிய காலம்.

குறிப்பாக வர்த்தகர்களுக்கு இவ்வேளையில் விசேட பொறுப்புக்கள் உண்டு. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைக்காது கொள்ளை லாபம், பதுக்கல் ஆகிய சமூகவிரோத மோசடிகளை அவர்கள் முற்றாகத் தவிர்க்க வேண்டிய காலம் இது.

யுத்த நிலைமையினால் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவது இயல்பு. அது தவிர்க்க முடியாததாகி விடுவதும் உண்டு. அதனைப் பயன்படுத்தி தவித்த முயல் அடிக்கும் மனோபாவம் சகல வர்த்தகர்களிடம் இருந்தும் அகலவேண்டும்.

பொதுச் சந்தையில் கையிருப்புத் தேய்ந்து வருகிறது அல்லது பொருள்களின் வரத்துத் தடங்கல் அடைகிறது என்பதை அறிந்து தம்மிடம் உள்ள இருப்பைப் பதுக்கி, செயற்கைத் தட்டுப்பாட்டை உண்டாக்குவது தான் வர்த்தகத்தின் வெற்றி என்று வர்த்தகர்களில் பெரும்பாலானோர் நினைப்பது உண்டு. குறுக்குவழியில் லாபம் தேடினால் தான் வாழ்க்கையில் முன்னேறலாம் என்றும் அவர்கள் தப்பிதமாக எண்ணுகிறார்கள்.

பணம் தான் உலகம் அல்லது வாழ்க்கை என்று மக்களில் பலரும் நினைக்கிறார்கள். அது தவறு. யுத்த காலத்திலும் அப்படி எண்ணுபவர்கள் புத்தியில்லாதவர்கள்.

யுத்தம் நடக்கும் வேளை எவரின் உயிருக்கும் பாதுகாப்பு இல்லை. இந்த நிமிடம் உயிர் வாழ்பவன் அடுத்த நிமிடம் மடியக்கூடும். போர்க்களத்தில் நிற்கும் போராளிக்கு மட்டுமோ இது பொருத்தம்? இல்லை, வீட்டில் இருக்கும், வீதியில் திரியும் பொதுமக்களுக்கும் பொருத்தம். பதுக்கி வைத்து வியாபாரம் செய்யும் வர்த்தகரோ, தனது பணியைப் புறக்கணித்த அரசாங்க அதிகாரியோ இதிலிருந்து விதிவிலக்குப் பெற முடியாது!

அப்படி இருக்கும்போது அடுத்தவனிடம் லாபம் அடித்து, அவதிப்படும் மக்களின் வயிற்றில் அடித்து பணத்தைத் தேடி என்ன பயன்? பாடுபட்டுத் தேடி பணத்தைப் புதைத்து வைப்பவர்கள் கேடுகெட்ட மாந்தர் என்றால்; மற்றவன் வயிற்றில் அடித்து கொள்ளை லாபம் பதுக்கலால்- பணம் தேடுபவன் மாந்தனே அல்லன்; அவன் வேறு பிறவி.

எனவே தமிழ்ப் பகுதியில் தொழிலாற்றும் தமிழ் வர்த்தகர்களே! உங்கள் இதயங்களைத் தொட்டுப்பாருங்கள் யுத்தகாலத்தில் உணவுப் பொருள் கிடைக்காமல், தமது உயிரைப் பிடித்து வைக்கப் படாதபாடு படும், அவலமும் உறுபவன் உங்கள் சகோதரன்: இரத்தத்தின் இரத்தம்; உங்கள் தமிழன்.

எனவே உங்கள் வர்த்தகத் தொழிலை மனசாட்சியுடன், மனநீதியுடன் இயற்றுங்கள். மக்கள் வயிற்றில் அடிக்க முயலாதீர்கள். சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திப் பணம் சம்பாதிக்க நினைக்காதீர்கள். யுத்த காலத்தில் பணத்தை விடச் சாவுதான் நிச்சயம் என்பதை மனதில் ஊன்றி நிறுத்துங்கள், எனவே மனிதாபத்துடன் உங்கள் மக்களுக்கு உதவுங்கள். அப்படிச் செய்யும் போது எமனும் உங்களை விட்டு அகன்று நிற்கக்கூடும்.

ஓ! வர்த்தகர்களே!! பதுக்கலையும், கொள்ளை லாபத்தையும் விலக்கி வைத்து நியாயம் செய்யுங்கள்!!!

# திருமலையில் இருந்து வந்த அகதிகள் முல்லைத்தீவில் உதவியின்றி அவஸ்தை

யாழ்ப்பாணம், ஜூன். 27

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் சாம்பல்தீவு, நிலாவெளி முதல் முல்லைத்தீவை அண்டிய பகுதிகள் வரை வீதியோரங்களில் உள்ள வீடுகளில் தஞ்சம் புகுந்திருப்பதாகவும் —

அவர்கள் உணவு, உடை வசதிகள் இன்றி அவதிப்படுவதாகவும் தெரியவருகிறது.

நிலாவெளி, கும்புறுப்பிட்டி, குச்சவெளி, திரியாய், புடவைக்கட்டு, அலம்பில், செம்மலைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ள மக்கள் அங்கு பெரும் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள்.

செம்மலைக்கு அப்பால் உள்ள இடங்களில் தங்கியிருக்கும் அகதிகள் பாதுகாப்புக்காக முல்லைத்தீவை நோக்கி வர விரும்புகிறார்கள்.

ஆனால் அவர்களை ஏற்றி வர போதிய படகு வசதிகள் இல்லை.

ஆகவே இந்த அகதிகளின் நிலையைகவனத்தில்கொண்டு பொது ஸ்தாபனங்கள் போக்குவரத்துக்கு தேவையான படகு வசதிகளையும்— கஷ்டப்படும் அகதிகளுக்கு உணவு, உடை வசதிகளையும் உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என திருமலையிலிருந்து வந்த அகதிகள் பலர் உதயன் பணிமனைக்கு வந்து கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். (உ)

## திருமலை அகதிகளுக்கு முல்லைத்தீவில் முகாம்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

திருகோணமலையில் இருந்து இடம் பெயர்ந்து வரும் அகதிகள் தங்குவதற்காக முல்லைத்தீவில் பரவலாக அகதிகள் முகாம்கள் திறக்கப்பட்டிருக்கின்றன.

திருமலை அகதிகளுக்காக புதுக்குடியிருப்பு பாடசாலை, புதுக்குடியிருப்பு விவசாய மத்திய நிலையம், உடையார் கட்டு பாடசாலை, முல்லைத்தீவு கட்டடத் திணைக்களம், குமுழமுனை ஐக்கிய நாணய சங்கம், அளம்பில் தேவாலயம், செம்மலை மகாவித்தியாலயம் ஆகிய இடங்களிலும் முள்ளியவளை, வற்றாப்பளை, கொக்குத்தொடுவாய் ஆகிய இடங்களிலும் முகாம்கள் திறக்கப்பட்டிருக்கின்றன.

இதே வேளை—

முல்லைத்தீவு நகரிலிருந்தும் மக்கள் முற்றாக இடம்பெயர்ந்திருக்கின்றனர். நகரம் வெறிச்சோடிக் காணப்படுகிறது.

நகரத்தில் இருந்து வெளியேறிய மக்கள் நகரத்துக்கு அப்பால் உள்ள கிராமப் புறங்களில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். (உ)

## மிதி வெடியில் இருவர் காயம்

யாழ்ப்பாணம் ஜூன் 27

தோட்டத்துக்கு சென்றவர்கள் மிதிவெடியில் சிக்கி பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

கடந்த சனிக்கிழமை வவுனியா - மடுவீதியில் பறையனாங்குளம் இராணுவமுகாம் அருகே இச் சம்பவம் இடம் பெற்றது.

இச் சம்பவத்தில் காயமடைந்த கண்ணன் வீரச்சாமி (வயது 60) வீரையா உதயகுமார் (வயது30) ஆகிய இருவரும் மானிப்பாயில் உள்ள யாழ் போதனா வைத்தியசாலைப் பிரிவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (உ.10)

## விமானத் தாக்குதலினால் காலை இழந்த சிறுவன்

யாழ்ப்பாணம், ஜூன் 27

விமானத்தாக்குதலுக்குப் பயந்து வீட்டுக்கு வெளியே சென்ற சிறுவன் குண்டுச் சிதறல்களினால் வலது கால்ப் பாதத்தை இழந்தான்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எம். ஆர். எம் சிராஜ் (வயது 7) என்ற முஸ்லிம் சிறுவனே இவ்வாறு பாதத்தை இழந்தான்.

இச் சம்பவம் திங்கட்கிழமை யாழ். மனோசராச் சந்தியில் இடம் பெற்றது.

இச் சிறுவன் தற்போது மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறான். (உ - 10)

வடபகுதியில் மட்டும்

## பெரிய ஆஸ்பத்திரிகள் ஐந்துக்கு மூடுவிழா!

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இயங்கி வந்த ஐந்து பெரிய ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டிருக்கின்றன.

ஆயிரத்து 100 நோயாளருக்கான படுக்கை வசதிகளைக் கொண்ட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை ஆஸ்பத்திரி, வவுனியா ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட வைத்தியசாலைகள் ஆகியவை தற்போது செயல் இழந்திருக்கின்றன.

இது தவிர, நகரப்பகுதிகள் மற்றும் கிராமங்களில் உள்ள அரச மத்திய மருந்தகங்கள், தனியார் ஆஸ்பத்திரிகள் என்பனவும் தற்போது மூடப்பட்டுள்ளன.

சில மூடப்பட்ட ஆஸ்பத்திரிகள் தற்காலிகமாக வேறு கட்டடங்களில் சிறிய அளவில் இயங்கி வருகின்றன. (அ-உ)

## அகதி முகாம்களில் கண்நோய் பரவும் ஆபத்து

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடக்கு, கிழக்கில் இடம் பெயர்ந்த மக்கள் அகதிகளாக தங்கியிருக்கும் முகாம்களில் கண் நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது,

சில முகாம்களில் கண் நோய் பரவுவதாக தகவல்கள் கிடைத்திருக்கின்றன என்று செஞ்சிலுவைச் சங்கஅதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

தற்போது கொசுக்கள் வேகமாக பெருகும் பருவகாலம் ஆதலால் கண்நோய் பரவும் ஆபத்து இருப்பதாகக் கூறிய அந்த அதிகாரி கண் நோய்க்கான மருந்துகளை துரிதகதியில் அகதிமுகாம்களுக்கு அனுப்பிவைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார். (உ)

## மட்டக்களப்பு நகருக்குள் இராணுவம் பிரவேசம்

கொழும்பு, ஜூன் 27

மட்டக்களப்பு நகருக்குள் கடந்த திங்கள் காலை ஸ்ரீலங்கா இராணுவம் முப்பதுக்கு மேற்பட்ட வாகனங்களில் பிரவேசித்தது

நகரின் கேந்திர நிலைகளில் இராணுவத்தினர் குழுக்களாக நிலை கொண்டுள்ளனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு பொலீஸ் நிலையம், பிரதி பொலீஸ் மா அதிபர் அலுவலகம், ஊறணி ஆகிய இடங்களிலும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

இன்னொரு இராணுவ அணி கல்லடி முகாமை நோக்கிச் சென்றதாகவும் அச் செய்திகள் தெரிவித்தன.

அப்பகுதிகளில் உள்ள இளைஞர்கள் மதப்பெரியார்களிடம் சஞ்சமடைந்ததாகவும் அச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது (இ-எ)

## ஷெல்லினால் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

வெங்காயத்துக்கு நீர் இறைத்துக்கொண்டிருந்தவர் ஷெல் தாக்குதலுக்கு இலக்கானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று மயிலிட்டிப் பகுதி தோட்டவெளியில் விழுந்து வெடித்ததன் காரணமாக இவர் காயமுற்றார்.

மயிலிட்டியைச் சேர்ந்த சரவணமுத்து விஜயகுமார் (வயது 38) என்பவரே இவ்வாறு காயமுற்று மானிப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-10)

## கால் இறுதிப் போட்டிக்கு மேலும் இரு நாடுகள் தகுதி

மிலான் ஜூன் 27

உலக கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் கால் இறுதி ஆட்டங்களில் கலந்து கொள்ளும் தகுதியை மேலும் இரண்டு நாட்டு அணிகள் பெற்றன.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஒரு மோதலில் இத்தாலி 2-1 கோல்களால் உருகுவேயைத் தோற்கடித்தது.

இன்னொரு மோதலில் அயர்லாந்து அணி 5-4 கோல்களால் ருமேனியா அணியை வென்றது.

கால் இறுதிப் போட்டிகளில் கலந்து கொள்ளும் தகுதியை ஏற்கனவே பெற்ற நாடுகள் வருமாறு;

கமரூன், செக்கோஸ்லேவேகியா, ஆர்ஜென்ரீனா, மேற்கு ஜேர்மனி. (இ-எ)

## கொழும்பு அகதிகள் திரும்ப பாதுகாப்பு தர முடியாது

### பொறுப்பதிகாரி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

கொழும்பில் அகதிகளாக உள்ள வடக்கு — கிழக்கு மாகாண மக்கள் அவரவர் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கு பாதுகாப்பாக படையினரையோ பொலீஸாரையோ அனுப்ப இயலாது இருப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சரித்திரத்வத்தை தெரிவித்தார்.

—இப்படி கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

அம்பாறை, கல்முனை பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நேற்று (செவ்வாய்) பலத்த பாதுகாப்புடன் லொறிகள் மூலம் அனுப்ப இருப்பதாகவும்... வதனை ஏற்பாடு செய்திருந்தார் என்றும் ... கூறப்பட்டிருந்தது. (உ-எ)

## நகரப் பாடசாலைகளை மூடுமாறு உத்தரவு

யாழ். நகரப் புறத்தில் உள்ள பாடசாலைகளை தற்காலிகமாக மூடிவிடும்படி யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நகரப் பாடசாலைகளான வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி ஆகிய பகுதிகளைச் சூழவுள்ள இடங்களில் மோதல்கள் நடைபெறுவதை அடுத்தும் இந்து மகளிர் கல்லூரி மீது குண்டுவீச்சு மேற்கொள்ளப்பட்டதை அடுத்துமே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-9)

## பூகம்ப மரணம்: எண்பதாயிரம் பேர்!

தெஹ்ரான், ஜூன் 27

ஈரான் பூகம்பத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 80 ஆயிரமாக அதிகரித்தது.

காயமடைந்தவர்களில் பலர் இறந்தனர். அதனைத் தொடர்ந்தே கடந்த திங்கள் வரை எடுக்கப்பட்ட புள்ளி விவரப்படி, 80 ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் இடிபாடுகளுக்கு இடையில் சிக்கி உள்ளவர்களைக் கண்டு பிடிக்கும்பணியை அரசு அதிகாரிகள் கைவிட்டனர்.

அப்படி தப்பியிருக்கக் கூடிய வாய்ப்புக்கள் குறைந்துவிட்டன என்று கருதப்படுவதே இதற்கு காரணமாகும். (அ-எ)

## தபாலகங்கள் சேதம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

தெல்லிப்பழை, சுன்னாகம் தபால் நிலையங்கள் ஹெலித் தாக்குதல்களினால் பலத்த சேதம் அடைந்துள்ளன.

சேதத்தை அடுத்து தெல்லிப்பழை தபால் நிலையம் துர்க்கையம்மன் கோவிலடிக்கு மாற்றப்பட்டுள்ளது. (உ-3)

சென்னை மத்திய சிறை

# உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

சென்னை, ஜூன் 27

சென்னை மத்திய சிறையில் உண்ணாவிரதம் இருந்து வந்த ஈ.பி.ஈ.ஆர் எல்.எப், ஈ.என்.டிஎல்.எவ் ரெலோ ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த 250பேர் கடந்த திங்கட்கிழமை அதனைக் கைவிட்டனர்.

தங்களை விடுதலை செய்யக் கோரி இவர்கள் உண்ணாவிரதம் இருந்து வந்தனர்.

ஈ பி.ஆர் எல் எப் தலைவர்கள் சிலர் கொலையுண்ட சம்பவத்தைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள சகல போராளிகளையும் கைது செய்யும்படி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டிருந்தது.

அப்போதே இவர்களும் கைதாகி காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

தங்களை விடுதலைசெய்து மண்டபம், திருச்சி ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களுக்கு தாங்கள் அனுப்பப்படவேண்டும் என இவர்கள் கோரியிருந்தனர்.

உண்ணாவிரதத்தால் இவர்கள் உடல்நிலை மோசமடைந்தது. அதனைத் தொடர்து இவர்கள் அனைவரும் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். (இ-எ)

## உல்லாசப் பயணிகள் வருவதற்கு கட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 27

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் விஜயம் செய்வது மறு அறிவித்தல் வரை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

அப்பகுதிகளுக்குச் செல்ல விரும்பும் வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் இலங்கை உல்லாசப்பயண சபைக்கு முன் கூட்டியே அறிவித்து அனுமதி பெறவேண்டும் என்றும் அரசு கோரியுள்ளது.

இதே வேளை - வெளிநாட்டுப் பத்திரிகையாளரும் தகுந்த அனுமதிப்பத்திரத்துடனேயே வடக்கு-கிழக்குப் பிரதேசத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

இதற்கான விண்ணப்பங்கள் வெளிவிவகார பிரிவின் பிரசாரப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இப்படி அரசு அறிவித்திருக்கிறது. (இ - எ)

ஈழப்போராளிகள் விவகாரம்:

## பொலீஸ் அதிகாரிக்கு கல்தா

சென்னை ஜூன் 27

மைலாப்பூர் பொலீஸ் நிலைய உதவி ஆணையாளர் திரு. இராமமூர்த்தி நேற்று தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

இலங்கை தமிழ்ப் போராளிகளை கைது செய்ய சென்றபோது முறையான ஆயுதங்களை எடுத்துச்செல்லவில்லை என்று கூறி தமிழ்நாடு பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இந்த தற்காலிக வேலை நீக்க உத்தரவைப் பிறப்பித்தார்.

தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்யத் தவறியதாக திரு இராமமூர்த்தி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (உ-எ)

## சாரணிய ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

தற்போதைய சூழ்நிலையில் உதவி வழங்கும் ஸ்தாபனங்களுடன் இணைந்து சேவையாற்றுமாறு யாழ். மாவட்ட ... விடுத்துள்ளார். (இ)

## நேற்றும் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

பலாலி, காங்கேசன் துறைப் பகுதிகளில் நேற்று பீரங்கித் தாக்குதல்களும் ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன.

நேற்றுக்காலை பலாலியில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போது இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று நண்பகல் காங்கேசன் துறையில் இராணுவத்தினர் நடத்திய ஷெல் தாக்குலில் மற்றும் ஒரு இளைஞர் காயமடைந்தார். இவர் மானிப்பாயில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (இ-10)

## மாவை முருகன் உற்சவத்தை நடத்துவதற்கு ஏற்பாடு

காங்கேசன்துறை, ஜூன் 27

சரித்திரப் பிரசித்திவாய்ந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகிறது. இன்றைய கொடியேற்ற வைபவத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய சூழ்நிலையிலும் உற்சவத்தை நடத்த வேண்டுமென்பதில் முருகன் அடியார்கள் உறுதியாக இருந்து செயல்படுவதாகவும் அதன் காரணமாக உற்சவத்தை நடாத்தவிருப்பதாகவும் ஆலய ஆதீனகர்த்தா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை—

மாவைக் கந்தன் ஆலய உற்சவ காலத்தில் அரசதரப்பு பங்களிப்பு இராது என்று வலி - வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

தற்போது எழுந்துள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு யாழ். அரச அதிபரின் அனுமதியுடன் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது விடயத்தை அரச நிறுவனங்கள், அரச சார்பற்றநிறுவனங்கள், மற்றும் அமைப்புகளுக்கும் உதவி அரச அதிபர் தெரியப்படுத்தியுள்ளார். (அ-68)

## உணவுப் பொருள்களைபெற அரச அதிபர்கள் முயற்சி

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் நிலவும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்கும்முகமாக அரச அதிபர்கள் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள் நேற்றுக் காலையில் வானொலிக்கருவி மூலம் வடமாகாணத்துக்குரிய அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையாவுடன் பேச்சுக்கள் நடத்தினார்கள்

விமானமூலமாகவும், வாகனங்கள் மூலமாகவும் உணவுப் பொருள்கள் அனுப்பமுடியாதுள்ளதாகவும்-

கப்பல் மூலமாக பட்டுமே அனுப்பமுடியும் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைக்கு வந்த மா கப்பலிலிருந்து மாவை இறக்கமுடியாத சூழ்நிலை இருந்தது அந்த நிலைமையே தொடர்ந்தும் காங்கேசன் துறையில் நிலவுவதால் அந்த கப்பலில் இருந்து பொருள்களை இறக்க முடியாதுள்ளது. ஆகையால் மண்டைதீவுப் பகுதியில் கப்பலைக்கொண்டு வந்து பொருள்களை இறக்கலாம் என்று இங்குள்ள அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்தார்கள்.

ஆனால் இந்த ஆலோசனையை கொழும்பு அதிகாரிகள் வரவேற்கவில்லை என்று அறியவந்தது. [உ-3)

## கொலையாளிகள் தப்புவதற்கு உதவியதாக 9 பேர் ஆஜர்

சென்னை ஜூன் 27

ஈ.பி.ஆர் எல்.எவ் தலைவர்களைக் கொலை செய்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுவோரைத் தப்பிச் செல்ல உதவியதற்காகக் கைதான ஒன்பது பேர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் பின்னர் 15 நாள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

பட்டுக்கோட்டையில் கடலோரக் கிராமமான சின்னமணியைச் சேர்ந்தவர்கள் இவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கொலையாளிகள் பாவித்ததாகக் கருதப்படும் வெள்ளை நிற மாருதிவான் இக் கிராமத்தில் அனாதரவாகக் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது தெரிந்ததே. [இ-எ]

## பல்கலைக்கழக---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களுக்கு ஏதோ துரதிஷ்டம் நடந்ததாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் கிடைத்ததைத் தொடர்ந்து பெற்றோர் பதற்ற முற்றுள்ளனர்.

இந்த ஊர்ஜிதமற்ற தகவல்கள் குறித்து யாழ். அரச அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

இன்று யாழ். அரச அதிபர் இதுசம்பந்தமாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையாவுடன் தொடர்பு கொள்ளவிருக்கிறார். (2-3)

## ஈழத் தமிழ---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

★ கடற்கரையோரமுள்ள நில உரிமையாளர்கள் போராளிகளின் நடவடிக்கைகளையும் கடத்தல் முயற்சிகளையும் அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்;

இப்படி அரசு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு தமிழகப் பத்திரிகைகளில் விளம்பரமாகவும் பிரசுரமாகி உள்ளது.

தமிழ் நாட்டில் தங்கியுள்ள சில இலங்கை தமிழர்கள் இந்தியாவின் நலனுக்கும் இந்தியாவின் அயலுறவுக் கொள்கைக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலும் நடந்து கொள்வதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தமிழக அரசின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. (அ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


ஏம்பிட்டு வர்ண நிழற்பட பிரதிகள்,
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
அட அல்பங்கள், படச்சுருள்கள்
இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.,

# உதயன்

27 - 6 - 1990 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
* தரமான வர்ண நிழற்படபிரதி ஒன்று 3R/PC - 6/30, 5/90, 5/50
* விநியோகம் ஒரு வாரம் [7 Days]
* விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



விமானக் குண்டு வீச்சில் சேதமடைந்த யாழ். பஸ் நிலையப் பகுதி

கல்வியங்காட்டில்

## ஹெலி ரொக்கட் வீச்சு!

யாழ்ப்பாணம், ஜுன் 27
ஹெலிக்கொப்டரில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ரொக்கட் தாக்குதலினால் மூன்று பேர் காயமடைந்தனர். வீடு ஒன்று சேதமடைந்தது

திங்கட்கிழமை இரவு 8.30 மணிஅளவில் கல்வியங்காடு, ஆடியபாதம் வீதி, பேச்சியம்பாள் ஆலயத்துக்கு அருகாமையில் இச் சம்பவம் நடைபெற்றது.

காயமடைந்தவர்களில் ஒருவர் அருளம்பலம் இராசதுரை (வயது 50) அவரது வீடும் சேதமடைந்தது காயம் அடைந்த மற்றும் இருவர் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர்கள். இவர்களில் ஒருவர் பின்னர் மரணமானார் என்றும் கூறப்படுகிறது. (இ-10)

## ஊர்காவல் படையினரிடம் சிக்கிய ஏழு இளைஞர்கள்

யாழ்ப்பாணம், ஜுன் 19
திருகோணமலையிலிருந்து படகு மூலம் அகதிகளாக வந்தவர்களில் ஏழுபேர் கொக்கிளாயில் வைத்து ஊர்காவல் படையினரால் கைதுசெய்யப் பட்டனர்.

இந்தப் படகில் ஆண்கள் பெண்கள் உட்பட சுமார் 30 பேர்வரை இருந்தனர் என்றும் —

படகு திசைமாறி கொக்கிளாய் சென்றதை அடுத்து ஊர்காவற்படையினரிடம் சிக்கியதாகவும் —

படகைச் சோதனையிட்ட ஊர்காவல்படையினர்படகில் இருந்த ஏழு இளைஞர்களைத் தம்முடன் அழைத்துச் சென்றனர் என்றும் கூறப்படுகிறது. (இ-50)

தீயணைப்புப் படையினர்

## பணியில் இருந்த வேளை அருகில் விழுந்த வேட்டு!

யாழ்ப்பாணம், ஜுன் 27
யாழ் மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் நேற்று இரண்டாவதுநாளாக யாழ். பஸ்நிலையப் பகுதியில் தீயணைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தது.

நேற்று முன்தினம் நடந்த குண்டுவீச்சில் பஸ் நிலையப் பகுதியில் தீப்பிடித்த கட்டடங்கள் நேற்றும் புகைந்து கொண்டிருந்தன.

இதனை அடுத்தே ஒரு தண்ணீர் பௌசரும் தீயணைப்பு வாகனமும் நேற்று சேவையில் ஈடுபட்டிருந்தன.

உயிரைத் துச்சமாக மதித்து சுமார் 10 ஊழியர்கள் தீ அணைப்பு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கமும் பஸ்நிலையப் பகுதிக்குச் சென்று தீயணைப்பு வேலைகளை நேரில் அவதானித்தார்.

தீயணைத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் ஒரு கட்டடத்தில் கோட்டையிலிருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுரவைகள் அவர்கள் நின்ற இடத்தில் வீழ்ந்தன. ஆணையாளரும் ஏனைய ஊழியர்களும் காயம் எதுவும் இன்றித் தப்பினர். (இ)

## திரிசாரணர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 23
யாழ். மாவட்ட திரிசாரணர்குழு (நல்லூர்) பிரிவின் அவசர சேவைக்கான கூட்டம் ஒன்று நாளை மாலை 4 30 மணிக்கு நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெறஇருக்கிறது. (அ-3)

## OBITUARY

### Mr. C. D. RAJOO

The death occured of C. D Rajoo Beloved brother of A. R. Rajoo, Rtd Assistant Commissioner of Excise & Bertie on 23-06-1990 at Chavakachcheri.

(13526)

## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா கைலாசபிள்ளை

[இளைப்பாறிய உள்ளூராட்சி நிர்வாக உத்தியோகத்தர்]

சரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு கந்தையா கைலாசபிள்ளை திங்கட்கிழமை [25. 6. 90] காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சூரியகலா நந்தினி [பிரான்ஸ்] ருத்திரன் [ஜெர்மனி]நகுலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் குணதாசன் [கனடா] நடேஸ்வரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரவீணின் பேரனும் நாகரத்தினம் [இளைப்பாறிய மாநகரசபை உத்தியோகத்தர்] சபாபதிப்பிள்ளை [இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்] காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் [இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்]பரமேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் M. S. நடராசாவின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நேற்று நடைபெற்றது அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

[குறிப்பு: தவிர்க்கமுடியாத காரணத்தால் நேற்று அறிவிக்க முடியவில்லை

தகவல்:
பிள்ளைகள்

ஆனைக்கோட்டை
வடக்கு.

[13481]

## உணவு - மருந்து - எரிபொருளுக்கு தீவுப்பகுதியில் பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜுன். 27
யாழ்ப்பாணத்துடனான சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டதால் தீவுப்பகுதியில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பண்ணைத் தாம்போதியூடான போக்குவரத்து கடந்த15நாட்களுக்கு மேலாக தடைப்பட்டிருப்பதே இதற்கு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

தீவுப்பகுதிக்குத் தேவையான மருந்து வகைகளையும் எரிபொருள்களையும் கூட எடுத்துச்செல்ல முடியாதுள்ளது

மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ள அதேவேளை மண்ணெண்ணெய் இல்லாததால் மக்கள் இருளில் காலம் தள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

அராலிக் கடல் வழியூடாக வள்ளத்தில் வரும் மக்கள் கால் நடையாக பலமைல் தூரம் யாழ் நகரப்பகுதிக்கு வந்து பொருள்களை வாங்கிச் செல்கின்றனர். [ஒ-3]

## அகதிகள் மீது பாலியல் வன்முறை!

யாழ்ப்பாணம், ஜுன் 27
கொக்கிளாய்ப் பகுதியில் இராணுவத்தினர் சில இளம் பெண்களைப் பிடித்து அவர்களைப் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

திருமலைப் பகுதியிலிருந்து வெளியேறி முல்லைத்தீவு நோக்கி இடம்பெயர்ந்து சென்ற அகதிகளில் சிலரே கொக்கிளாயில் வைத்து இவ்வாறு இம்சைப்படுத்தப்பட்டதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இப்பெண்களின் உடலில் சிகரெட்டினால் சுடப்பட்டதாகவும் கூறப்பட்டது. (உ)

## தீவுப்பகுதிக்கும் மக்கள் பெருமளவில் இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், ஜுன் 27
யாழ். குடாநாட்டில் இருந்து ஏராளமான மக்கள் இடம்பெயர்ந்து தீவுப்பகுதிக்கும் செல்கிறார்கள்.

இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அங்கு அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

வேலணை சாட்டி மாதா ஆலயம். அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை, சுருவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை, நாரந்தனை பேதுருவானவர் ஆலயம், சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், வேலணை வெள்ளைக் கடற்கரை முஸ்லிம் பள்ளிவாசல் ஆகியஇடங்களில் அகதிகள் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான உதவிகளை சர்வோதயம், சென் ஜோன்ஸ் அம்புலன்படை, செஞ்சிலுவைச் சங்கம் உட்பட பல சமூக அமைப்புகள் வழங்கி வருகின்றன. [ஒ-3]

## ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வேலணையில் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஜுன் 27
காரைநகர் பகுதியில் இடம்பெற்று வரும் தாக்குதல்களை அடுத்து ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையும் மூடப்பட்டது.

இந்த வைத்தியசாலை வேலணை கிராமிய வைத்தியசாலையுடன் தற்சமயம் இயங்கிறது.

அதே சமயம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் தற்காலிகமாக ஊர்காவற்றுறை பிரதேசசபை நாரந்தனை உப-அலுவலகத்துக்கும் மாற்றப்பட்டுள்ளது. (ஒ-3)

## சிக்கன கூட்டுறவு சமாஜக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 27
யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாஜத்தின் இயக்குநர் சபைக் கூட்டம் நாளைவியாழக்கிழமைகாலை 10 மணிக்கு நல்லூர் ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

அனைத்து இயக்குநர் சபை உறுப்பினர்களையும் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (அ-3)

## காங்கேசன் செல்வதற்கு படையினர் பிரயத்தனம்

காங்கேசன்துறை, ஜுன் 27
பலாலியில் இருந்து மயிலிட்டி ஊடாக காங்கேசன்துறைக்கு முன்னேற இராணுவத்தினர் பகிரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை திஸ்ஸவிகாரை முகாமிலும், மகஸீன் முகாமிலும் தங்கியுள்ள படையினர் வெளித் தொடர்பு இல்லாமல் முடங்கிக் கிடப்பதால் அவர்களை மீட்பதற்காகப் படையினர் காங்கேசன்துறை நோக்கி முன்னேற முயல்வதாகக் கூறப்படுகிறது.

பலாலியிலிருந்து புறப்படுவதற்கு வசதியாக பலாலி, மயிலிட்டி பகுதிகளில் பொம்மரில் இருந்து குண்டு மாரி பொழிவதுடன், ஹெலித்தாக்குதலும் இடம் பெறுகிறது. இடையிடையே ஷெல் தாக்குதலும் நடத்தப்படுகிறது.

எனினும் படையினரால் முன்னேறமுடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-68)

## நகரின் ஒரு பகுதி இருளில்

யாழ்ப்பாணம், ஜுன் 27
யாழ். நகரின் சில பகுதிகள் இரண்டாவது நாளாக நேற்று இருளில் மூழ்கியுள்ளன.

திங்கட்கிழமைநடைபெற்ற விமானத் தாக்குதலின் போது மின்கம்பிகள் அறுந்து சேதமடைந்ததன் காரணமாகவே மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது. (இ-10)

## அகதிகளுக்கு உதவ ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜுன் 27
யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள அகதிகளுக்கு சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும் உதவிகளை வழங்க இருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக ஆராய்வதற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளார். (ஒ-3)

## மன்னார் தாம்போதி தகர்ப்பு; தொடர்புகள் துண்டிப்பு

மன்னாருக்குச் செல்லும் பிரதான வீதியிலுள்ள தாம்போதி கடந்த திங்கட்கிழமை இரவு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதால், மன்னாருடனான சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

மன்னார்ப் பகுதிக்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே வேளை உணவுப் பொருள்களுக்கும் அங்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்பட்டது. (ஒ-3)

## படையினர் ரோந்து செல்ல மக்கள் கேடயமாகப் பாவிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 27
கிழக்கில் ஸ்ரீலங்கா படையினர் தாங்கள் முன்னேறுவதற்கு வசதியாக பொதுமக்களை கேடயமாக பாவிப்பதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் அம்பாறை மாவட்டம் கோமாரி முகாமிலிருந்து அக்கரைப்பற்று முகாமுக்கு செல்வதற்கு இராணுவத்தினர் பெருந்திரளான பொதுமக்களைப் பிடித்து அவர்களைத் துப்பாக்கிமுனையில் தங்களுக்கு முன்னும் பின்னும் கூட்டிச் சென்றனர்.

விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ)

## மேலதிக துருப்புகள் வடக்கே விரையும்

### ரஞ்சன் நேற்றுத் தகவல்

கொழும்பு, ஜுன் 27
வடக்கு மாகாணத்துக்கு மேலதிக துருப்புக்கள் அனுப்பி வைக்கப்படஇருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்திருக்கிறார்.

கண்டி, பள்ளேகல கம் உதாவ கண்காட்சியில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தை இராணுவம் தனது பூரணகட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்திருக்கிறது —

வடக்கு மாகாணத்தையும் அப்படிக் கொண்டுவருவதற்காக மேலதிக துருப்புக்கள் அங்கு அனுப்பி வைக்கப்படும்.

யாழ் கோட்டை முகாமை மீட்கும் முயற்சியில் பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர். அச்சமயம் கோட்டையை அண்டி வாழும் அப்பாவி மக்களையும் பாதுகாக்கும் முயற்சியிலும் படையினர்ஈடுபடுவர்-என்றும் அமைச்சர் அப்போது சொன்னார். (அ-எ

## செயலக ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் ஜுன் 27
யாழ் செயலகத்தில் பணிபுரியும் சகல ஊழியர்களையும் இன்று புதன்கிழமை வேலைக்குச் சமுகமளிக்குமாறு அரச அதிபர் அழைப்பு விடுத்துள்ளார்.

சமூகசேவைப் பகுதி, உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதி, பரிபாலனப் பகுதி ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்கள் கட்டாயம் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (ஒ-3)

## இரு பெண்கள் காயம்

யாழ்ப்பாணம், ஜுன் 27
கடந்த ஞாயிறன்று காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டினால் ஊர்காவற்றுறை காம் வீதியைச் சேர்ந்த இரு பெண்கள் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமுற்றன.

காயமுற்ற இருவரும் உடனடியாக வேலணை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (உ-3)

## அகதிகள் வருகை

யாழ்ப்பாணம், ஜுன் 27
திருகோணமலையில் இருந்து நேற்றும் அகதிகள் பலர் நல்லூர் வந்து சேர்ந்தனர்.



மிட்டாசிக் கடைச் சந்தியில் குண்டுகளுக்கு இரையான மற்றும்சில கடைகள் படங்கள் கே. எஸ். ஆர்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 லக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org